*2023 ஜனவரி 12*]

**20—**

## சமுதாயக் கூடம்

***45030—திரு. S.S. பாலாஜி:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி, சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் உள்ள இருளர் பகுதிக்குச் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதி, சதுரங்கப்பட்டினம் ஊராட்சிக்குட்பட்ட மெய்யூர் கிராமத்தில் மரத்தோட்டம் என்ற பகுதியில் 38 இருளர் இன குடும்பங்களில் சுமார் 110 நபர்கள் வசித்து வருகின்றனர். மெய்யூர் கிராமத்தில் மரத்தோட்டம் பகுதியிலும், சதுரங்கப்பட்டினம் ஊராட்சியிலும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான இரண்டு சமுதாயக் கூடங்கள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. விளிம்புநிலை மற்றும் பட்டியல் மற்றும் பழங்குடியின மக்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, இடவசதி மற்றும் தேவையின் அடிப்படையில் சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

**திரு. S.S. பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு சமுதாயக் கூடங்கள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். அங்கே இரண்டு சமுதாயக் கூடங்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. ஆனால், அவை பயன்படுத்தத்தக்க வகையில் இல்லை என்பதால்தான் புதிதாக*

சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படுமா என்று கேட்டிருக்கிறேன். அவற்றில் ஒன்று, கட்டி முடித்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகின்றன; மற்றொன்று, 17 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, புதிய சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 4,119 பழங்குடியின மக்கள் வசித்து வருவதாக 2011 ஆம் ஆண்டைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1971–1972 ஆம் ஆண்டு முதல் சமுதாயக் கூடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில் தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 308 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, சில கட்டடங்கள் பயன்படத் தகுதியுள்ளனவா, இல்லையா என்பதைக் குறித்து அவற்றைப் பற்றிய முழுமையான தகவல்களை அறிக்கையாகப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேவையின் அடிப்படையில், இடிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் இருக்கின்ற கட்டடங்கள், repair work செய்யப்பட வேண்டிய கட்டடங்கள் உள்ளிட்ட தகவல்களைப் பெற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு கண்டிப்பாக முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

**திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்கள் வசிக்கக்கூடிய பல்வேறு பகுதிகளுக்கு இதுபோன்ற சமுதாயக் கூடங்கள் தேவை என்கின்ற நிலையிருக்கிறது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் இத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட

*2023 ஜனவரி 12]*

*ரூ.927 கோடி திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்கின்ற ஒரு நிலையை அறிகிறேன். ஆகவே, வருங்காலங்களில் இந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய சமுதாயக் கூடங்கள் போன்ற அத்தியாவசியக் கட்டமைப்புகளை உருவாக்கித் தருவதற்கு சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நிதி திருப்பி அனுப்பப்பட்டாலும், அடுத்த ஆண்டு அந்த நிதியைப் பெற்று, அதற்கான பணிகளை துறை தொடர்ந்து மேற்கொண்டுதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, எந்தத் தொகையும் செலவு செய்யாமல் திருப்பியனுப்பப்படவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் வந்ததற்குப் பிறகு திருப்பியனுப்பப்படவில்லை.*

**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *நம்முடைய ஆட்சியில் அல்ல; கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.927 கோடி திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக* RTI-*ல் வந்த தகவலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இருந்தபோதிலும், எல்லா தொகையையும், அடுத்தடுத்த ஆண்டுகளில் செலவு செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதேபோன்று கோவிட் பெருந்தொற்று காலத்தில் சில பணிகள் செய்ய முடியாமல் இருந்தன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அனைத்துத் திட்டப் பணிகளையும் கூடுதல் அக்கறையோடு துறையின்மூலம் மேற்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]